DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.29/2024**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலமுருகன் | Caste: | |
| Father's Name: | பெசல்பாண்டி | Calling: | சென்னையில் வேலை |
| Village: | கிழக்கு தெரு, மாரந்தை | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 32 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தில் கிழக்கு தெருவில் வசித்து சென்னையில் ஒரு தனியார் பெட்ரோல் பல்க் நிறுவனத்தில் பெட்ரோல் போடும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கண்ணய்யாவை தெரியும். சாட்சிகள் கருமலையான் மகன் மலைமுருகன், முத்துசெல்வம் மகன் மலைமுருகன் ஆகியோர்களை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் பக்கத்து ஊர்க்காரர்கள். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரிகள் மூவரும் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள். அ.சா.1 கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் அறிவேன் சாட்சியென உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2**.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:59:06 +0530

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 27.05.2024ம் தேதி காலை புனவாசல் கிராமத்தை சேர்ந்த மாயகிருஷ்ணன் அவர்களின் காதணி விழா கடலாடியில் உள்ள தேவர் மகாலில் நடைபெற்றது என்றும் அதில் கலந்துகொள்வதற்காக நானும் கண்ணய்யா, மலைமுருகன் ஆகியோர்கள் சென்றோம் என்றும் காதணி விழா முடிந்ததும் மண்டபத்தில் சாப்பிட்டு கொண்டிருந்தோம் என்றும் அப்போது புனவாசல் கிராமத்தை சேர்ந்த திருநாவுக்கரசு, திருச்செல்வம் என்ற திருச்செல்வமுருகன், மணிகண்டன் ஆகியோர்கள் சேர்ந்து சாப்பாடு பரிமாறி கொண்டிருந்த சமையல் மாஸ்டரான சாத்தன்குடி கிராமத்தை சேர்ந்த லெட்சுமணன் என்பவரிடம் வாக்குவாதம் செய்து எதிரிகள் மூவரும் லெட்சுமணனை அடித்துவிட்டார்கள் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் மூவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும் பின்பு நாங்கள் சாப்பிட்டுவிட்டு ஊருக்கு மாலை 3.30 மணியளவில் நான், மலைமுருகன், கண்ணய்யா ஆகியோர் ஒரே பைக்கில் புனவாசல் கொட்டகையில் உள்ள பூட்டு திருக்கண்ணன் என்பவர் வீட்டருகே சென்றுகொண்டிருக்கும்போது எதிரிகள் திருநாவுக்கரசு, திருச்செல்வம், மணிகண்டன் நாங்கள் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிந்தும் வழிமறித்து எங்கள் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி இங்க எதுக்குடா வர்றீங்க என்று மூவரும் சேர்ந்து கையாலும், காலாலும் கண்ணய்யாவின் உடம்பு முழுவதும் அடித்து

C MOHAN RAM Digitally signed by C MOHAN RAM Date: 2026.02.23 15:59:10 +0530

கீழே தள்ளிவிட்டார்கள் என்றும் எதிரிகள் மூவரும் தாங்கள் வைத்திருந்த அருவாளை எடுத்து காண்பித்து இனிமேல் இந்த வழியே வந்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும் இதுசம்பந்தமாக அந்த ஊர் பெரியவர்களிடம் சொல்லிவிட்டு கடலாடி காவல்நிலையம் வந்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கண்ணய்யா புகார் மனு கொடுத்தார் என்றும், கண்ணய்யாவிற்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லாததால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றும் கடநத் 27.05.2024ம் தேதி முதுகுளத்தூர் டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களோடு சமாதானம் செய்துகொண்டு அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:59:14 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.29/2024**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மலைமுருகன் | Caste: | |
| Father's Name: | கருமலையான் | Calling: | விவசாயம் |
| Village: | கிழக்கு தெரு, மாரந்தை | Religion: | |
| Taluk: | கடலாடி | Age: | 42 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 23.02.2026

( எதிரிகள் ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தாலுகா மாரந்தை கிராமத்தில் கிழக்கு தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கண்ணய்யாவை தெரியும். அ.சா.2 பாலமுருகனை தெரியும். சாட்சிகள் முத்துசெல்வம் மகன் மலைமுருகனை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் பக்கத்து ஊர்க்காரர்கள். நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். எதிரிகள் மூவரும் சீர்மரபினர் வகுப்பை சேர்ந்த மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள். அ.சா.1 கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:59:19 +0530

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 27.05.2024ம் தேதி காலை புனவாசல் கிராமத்தை சேர்ந்த மாயகிருஷ்ணன் அவர்களின் காதணி விழா கடலாடியில் உள்ள தேவர் மகாலில் நடைபெற்றது என்றும் அதில் கலந்துகொள்வதற்காக நானும் கண்ணய்யா, பாலமுருகன் ஆகியோர்கள் சென்றோம் என்றும் காதணி விழா முடிந்ததும் மண்டபத்தில் சாப்பிட்டு கொண்டிருந்தோம் என்றும் அப்போது புனவாசல் கிராமத்தை சேர்ந்த திருநாவுக்கரசு, திருச்செல்வம் என்ற திருச்செல்வமுருகன், மணிகண்டன் ஆகியோர்கள் சேர்ந்து சாப்பாடு பரிமாறி கொண்டிருந்த சமையல் மாஸ்டரான சாத்தன்குடி கிராமத்தை சேர்ந்த லெட்சுமணன் என்பவரிடம் வாக்குவாதம் செய்து எதிரிகள் மூவரும் லெட்சுமணனை அடித்துவிட்டார்கள் என்றும் அங்கிருந்தவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் மூவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும் பின்பு நாங்கள் சாப்பிட்டுவிட்டு ஊருக்கு மாலை 3.30மணியளவில் நான், பாலமுருகன், கண்ணய்யா ஆகியோர் ஒரே பைக்கில் புனவாசல் கொட்டகையில் உள்ள பூட்டு திருக்கண்ணன் என்பவர் வீட்டருகே சென்றுகொண்டிருக்கும்போது எதிரிகள் திருநாவுக்கரசு, திருச்செல்வம், மணிகண்டன் நாங்கள் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிந்தும் வழிமறித்து எங்கள் சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசி இங்க எதுக்குடா வர்றீங்க என்று மூவரும் சேர்ந்து கையாலும், காலாலும் கண்ணய்யாவின் உடம்பு முழுவதும் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும் எதிரிகள் மூவரும் தாங்கள் வைத்திருந்த அருவாளை எடுத்து காண்பித்து இனிமேல் இந்த வழியே வந்தால்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:59:23 +0530

உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்றும் இதுசம்பந்தமாக அந்த ஊர் பெரியவர்களிடம் சொல்லிவிட்டு கடலாடி காவல்நிலையம் வந்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கண்ணய்யா புகார் மனு கொடுத்தார் என்றும், கண்ணய்யாவிற்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லாததால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றும் கடந்த 27.05.2024ம் தேதி முதுகுளத்தூர் டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களோடு சமாதானம் செய்துகொண்டு அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.23 15:59:27 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)